கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள், செவ்வாய்கிழமை
இடைநிலை மனு எண்.7/2026
இன்
அசல் வழக்கு எண்.317/2008
* * * *

பழனியாண்டி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

ராஜூத்தேவர் (இறப்பு ... 1ம் பிரதிவாதி

1. சக்கையாத்தேவர்
2. பாலு (எ) பாலசுப்பிரமணியம்
3. அக்கம்மாள்
4. ராஜலெட்சுமி
5. சாந்தி ... 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ 2 முதல் 6 பிரதிவாதிகள்

6. சந்திரா .... உத்தேச எதிர்மனுதாரர் / 7வது உத்தேச பிரதிவாதி

இம்மனுவானது இன்று 24.03.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த

வழக்கறிஞர் திரு.N.நமச்சிவாயம் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள்/2 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 1ம் பிரதிவாதி அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்ட நிலையிலும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது 1வது உத்தேச தரப்பினரை அசல் வழக்கு எண்.317/2008-ல், 7வது பிரதிவாதியாக சேர்க்கவேண்டி மனுதாரர்/வாதி தரப்பில் கட்டளை 1 விதி 10(2) மற்றும் விதி 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.</u>**

மனுதாரர்/வாதி தரப்பு மனு மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் எதிருரை மற்றும் வழக்கு

ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யவில்லை.

1.1) அசல் வழக்கானது வழக்குச்சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டதாக விளம்புகை செய்யவேண்டியும், அதனை தொடர்ந்து தாவாச்சொத்தை பொறுத்து வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ அல்லது அவர்களது முகவர்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யாதிருக்கும்பொருட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) மேலும், மேற்படி மனுதாரர்/வாதி தரப்பில், தாவாச்சொத்துக்கள் ஆதியில் வாதியின் தாத்தாவான கருப்பயைாத்தேவருக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வந்ததாகவும், அவரது இறப்பிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான முத்தையா மற்றும் பொன்னுச்சாமி தேவருக்கு பாத்தியப்பட்டு அவர்களது அனுபவத்தில் இருந்து வந்ததாகவும், இந்நிர் மனுதாரர்/வாதி மேற்படி பொன்னுச்சாமியின் வாரிசு என்றும், மேற்படி பொன்னுச்சாமி அவரது வாரிசான மனுதாரர்/வாதியின் பெயரில் தாவாச்சொத்தினை பாத்தியப்படுத்தியதாகவும், இந்நிலையில், தாவாச்சொத்தில் உள்ள மனுதாரர்/வாதியின் அனுபவத்தினை இந்நிர்

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையூறு செய்ததாகவும், அதன் பொருட்டு அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

1.3) இந்நிலையில், இந்நிர் பிரதிவாதிகள் தரப்பில் 12.09.2008ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி எதிர்வழக்குரையில், இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மனைவிகள் தங்களுக்கான உரிய பங்குகளுக்காக சொத்தில் உரிமை பெற்றவர்கள் என்றும், அதன்பொருட்டு மனுதாரர்/வாதிக்கு தாவாச்சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், மேலும், கோணம்மாளும் அவர்களது குழந்தைகள் மட்டுமே தாவாச்சொத்தின் உரிமையாளர்கள் என்று குறிப்பிட்டுள்ளதாகவும், இந்நிலையில், 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் அசல் வழக்கில் 3 முதல் 6 வாரிசுகளாக சேர்க்கப்பட்டுள்ள நிலையில், 2ம் பிரதிவாதியின் மனைவியான சந்திரா என்பவரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், அதன்பொருட்டு அசல் வழக்கில் எவ்விதமான நுட்பக்கோளாறு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மேற்படி 2ம் பிரதிவாதியின் மனைவியை அசல் வழக்கில் 7ம் பிரதிவாதியாக சேர்க்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.1) 1ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில், மனுதாரர்/வாதி தரப்பு இம்மனுவானது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு 17 வருடங்கள் கழித்து தற்போது மேற்படி 2ம் பிரதிவாதியின் மனைவியை அசல் வழக்கில் 7வது எதிர்மனுதாரராக சேர்க்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளபோதிலும் அதற்கு சட்டப்படியான காரணங்களை குறிப்பிட்டு மனுதாரர்/வாதி தரப்பில் இந்நிர் மனுவானது தாக்கல் செய்யப்படவில்லை என்றும் அசல் வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்நிர் மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேலும் 1ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை 5ம் எதிர்மனுதாரர்/6ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார்.

**3) தீர்வு:–**

3.1) அசல் வழக்கானது இருதரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள

இம்மனுவினை அனுமதிப்பது குறித்து பரிசீலனை செய்கையில், அசல் வழக்கு எண்.317/202008—ல் இந்நிர் உத்தேச எதிர்மனுதாரரை, 7வது பிரதிவாதியாக சேர்க்கப்பட வேண்டுமா என்பதேயாகும். இந்த மனுவானது கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணைமுறை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2) மேலும், அசல் தாவாச்சொத்து சம்பந்தமாக இந்நிர் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில், இந்நிர் உத்தேச எதிர்மனுதாரர், 1வது எதிர்மனுதாரர்/2வது பிரதிவாதியின் மனைவி என்றும், தாவாச்சொத்துக்கள் ஆதியில் இருளப்பத்தேவருக்கு பாத்தியப்பட்டு, மேற்படி தாவாச்சொத்துக்களை சென்னம்பட்டியைச் சேர்ந்த திருவேட்டை மகன் ஆத்தங்கரை தேவர் என்பவருக்கு கிரையப்பத்திரத்தின் மூலம் பாத்தியப்படுத்தியதாகவும், மேற்படி ஆத்தங்கரை தேவர் அவரது ஒரே வாரிசான முத்துமுருகனை விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், மேற்படி முத்துமுருகன் அவரது வாரிசான வெள்ளைச்சாமி என்பவரை விட்டு விட்டு இறந்துவிட்ட நிலையில், தாவாச்சொத்துக்கள் மேற்படி வெள்ளைச்சாமிக்கு பாத்தியப்பட்டதாகவும், இந்நிலையில், மேற்படி வெள்ளைச்சாமி, அவரது மனைவியான கோணம்மாள் ஆகியோர்களின் வாரிசான, 1ம் மகளை 1ம் பிரதிவாதியும், 2வது மகளான சந்திராவை இந்நிர் 2ம் பிரதிவாதியும்

திருமணம் செய்துக்கொண்டதாக குறிப்பிட்டுள்ள நிலையிலும், அசல் வழக்கில் ஏற்கனவே இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் 2 முதல் 6 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ள நிலையிலும், இந்நிர் 2ம் பிரதிவாதியின் மனைவியான சந்திராவை அசல் வழக்கில் சேர்ப்பது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தும், மேற்படி 2ம் பிரதிவாதியின் மனைவியான இந்நிர் உத்தேச பிரதிவாதியான சந்திராவை அசல் வழக்கில் சேர்க்கும்பொருட்டு, அசல் வழக்கின் ஒரு முழுமையான தீர்வுக்கு கொண்டு வருவதற்கும், வழக்கு தரப்பினர்களுக்கு இடையேயுள்ள பிரச்சனையை முழுமையாக தீர்ப்பதற்கு இம்மனுவினை அனுமதிப்பது ஒரு காரணியாக அமையுமே தவிர இம்மனுவினை அனுமதிப்பதினால் தரப்பினர்கள் யாருக்கும் எவ்வித சாதக பாதகமும் இருக்காது என்பதை கருத்தில் கொண்டு இம்மனுவானது அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 24.03.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.24 17:57:41 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

<u>**இணைப்பு**</u> : –

**<u>1. மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>**: இல்லை

**<u>2. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:</u>** இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.24 17:58:38 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.7/2026
இன்
அசல் வழக்கு எண்.317/2008
செவ்வை – உத்தரவு
நாள்: 24.03.2026